REGD. No M. 6311

தனி இதழ்
ஒரு அணா
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 110

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

"THE NAM NADU" A TAMIL DAILY: THE OFFICIAL ORGAN OF: THE D.P.F.

சந்தா விகிதம்:
1 வருடம் ரூ. 24—0—0
6 மாதம் ரூ. 12—0—0
3 மாதம் ரூ. 6—0—0
[illegible]
[illegible]

சென்னை: ஐப்பசி 4௳ செவ்வாய் (20—10—53) ★ ★ ★ வெளியூர்: ஐப்பசி 5௳ புதன் (21—10—53)

பிரார்த்தனைக் கூடம் வெறும் ஏமாற்று வித்தை!

— (:) —

மழைக்கு நினைவுசின்னம் எழுப்புவார் உண்டா?

கடவுள் பிரசாரகர்களில் பலர் அரசியல் கபட நாடகக் கூத்தாடிகள்

மக்கள் குறை களைவதே உயர்ந்த வழிபாடாகும்

"பிரார்த்தனைக் கூடம் என்பதே வெறும் ஏமாற்று வித்தை. ஊரில் எத்தனையோ கோவில்கள் இருக்கின்றன. பிரார்த்தனை செய்ய ஆட்களைத்தான் காணவில்லை. வேண்டியது பிரார்த்தனைக் கூடங்களல்ல; பிரார்த்தனை செய்ய மக்கள்தான் வேண்டும்."

"மக்கள் ஏன் பிரார்த்தனைகளில் சிரத்தை கொள்ளுவதில்லை என்று கேட்கலாம். அவர்களுக்கு எத்தனையோ விசாரங்கள் இருக்கின்றன."

"அன்ன விசாரம்தான், முதல் விசாரம். அடுத்தபடியாக பிரார்த்தனையின் பெருமைகளைப் பிரசாரம் செய்கிறவர்களில், அநேகர், கபட நாடகம் போடுகிறவர்களாய் இருக்கிறார்கள்."

"எனவே, முதலில் வேண்டியது மக்களுக்குள்ள குறைகளைப் போக்குவதாகும். மகாத்மாவுக்கு எதற்காக ஞாபகச் சின்னம்? ஞாபகச் சின்னங்களுக்கெல்லாம் அப்பால் உள்ளவர் மகாத்மா."

"மழைக்கு எங்காவது ஞாபகச் சின்னம் வைப்பது உண்டா? உயிர்களுக்கு மழை எப்படி ஆதாரமோ, அப்படி இந்தியாவின் உயிருக்கு மகாத்மாவின் உபதேசங்கள் ஆதாரமாய் இருக்கின்றன. இந்தியா உள்ளளவும் மகாத்மாவை, மறந்துவிட முடியாது."

"மகாத்மாவுக்கு வணக்கஞ் செய்ய விரும்பினால், மக்களின் குறைகளைப் போக்கவேண்டும். அதைவிட திருப்தியானது மகாத்மாவுக்கு எதுவுமே கிடையாது"

—"ஜனயுகம்" 20—10—53

ரூ. 67 கோடி கடன்

இந்தியாவுக்கு பர்மா தரவேண்டுமாம்!

புதுடெல்லி, அக் 20—
1950 மார்ச் 31ந் தேதி முடிய, பர்மா, இந்தியாவுக்கு ரூ. 67 கோடி கடன் கொடுக்க வேண்டும்; இதில் ஒரு பகுதியைக்கூட இன்னும் திருப்பித் தரப்படவில்லை. பர்மாவில் உள் நாட்டு குழப்ப நிலைமையை உத்தேசித்து இந்திய சர்க்காரும் இதுவரை பொறுத்திருந்தது.

இதுபற்றி பேச்சு வார்த்தைகள் நடந்த, அடுத்த மாதம் இந்திய சர்க்கார் நிதி இலாகா உயர்தர அதிகாரியொருவர் பர்மாவுக்குச் செல்வாரென்று தெரிகிறது.

வெளியேற மாட்டோம்!

டர்பன், அக். 20—
சமீபத்தில் இந்தியரை வெளியேற்றுவது பற்றி பார்லிமெண்டில் பேசிய பிரதமர் மலானுக்கு தென்னாப்பிரிக்க இந்தியர் பதிலனுப்பி யிருக்கின்றனர்.

"தென்னாப்பிரிக்காவை விட்டு இந்தியர்கள் ஒருபோதும் வெளியேறமாட்டார்கள்; இந்தியர்களில் 90 சத வீதத்தினர் இங்கேயே பிறந்து வளர்ந்திருக்கின்றனர்; நான்கு தலைமுறைகளாக தென்னாப்பிரிக்காவையே தங்கள் தாயகமாகக் கொண்டிருக்கின்றனர்." என்று, இந்தியர்கள், டாக்டர் மலானுக்கு இடித்துக் கூறியிருக்கின்றனர். டாக்டர் மலானும், அவர் மூதாதையர்களும், அன்னியர்கள்தான் என்பதை மறக்கக் கூடாதென்று சுட்டிக் காட்டியுள்ளனர்.

அனாதைகளில் ஆண்களை விட பெண்சிறுவர்களே அதிகம்

300 அனாதை விடுதிகளை கிறித்துவர் நடத்துகின்றனர்!

இதைக் கண்டும் 'இந்து'க்களுக்கு வெட்கமும் இல்லை! மானமும் இல்லை!

உள்ளத்தை உருக்கும் ஆதரவற்ற சிறுமிகளின் சோகக் கதை!

சென்னை, அக். 20 —
"அனாதைப் பெண்களைப் பாதுகாக்காது விட்டுவிட்டால், அனாதைப் பையன்களைவிட கீழான நிலை அடைந்து, சமூகத்திற்குப் பெருந் தீங்கும், மானக்கேடும் உண்டாகக்கூடும்."

"நமது மாநிலத்தில், மணமானபின் விதவையாகிவிடுவதாலோ, அல்லது தங்கள் கணவன்மார்களால் கைவிடப்படுவதாலோ, தங்கள் குழந்தைகளையும் காப்பாற்றும் பொறுப்போடு கோடிக்கணக்கான பெண்கள் அனாதையாக வாடி வருந்துகிறார்கள். இது, நமது அனாதை விடுதிகளில் தஞ்சமடையும் எண்ணற்ற இளம் பெண்களிடமிருந்து கேள்வியுறும் சோகக் கதைகள். ஆகையால், திருமணம் என்பதே பெண்கள் வாழ்க்கையின் ஒரு குறிக்கோள் என்னும் எண்ணத்தை நாம் வளரவிடக் கூடாது."

"கிருத்துவ மதத்தினர் எங்கெங்கே ஆண்களுக்கு அனாதை விடுதிகள் ஏற்படுத்தியுள்ளனரோ, அங்கெல்லாம் பெண்களுக்கும் ஏற்படுத்தி யிருக்கின்றனர். கிருத்துவ அனாதை விடுதிகள் ஏறத்தாழ 300-க்கு மேல் உள்ளன. ஆனால் கோடிக்கணக்கான மக்களைக்கொண்ட இந்து மதத்தினருக்குள்ள அனாதை விடுதிகளை, விரல்விட்டு எண்ணி விடலாம்."

—இவ்வாறு திருமதி முத்துலட்சுமி ரெட்டி விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்.

டாக்டர் முத்துலட்சுமி மேலும் அறிக்கையில் குறிப்பிடுகையில், "நமது மாநிலத்தில் இன்னும் கோடிக்கணக்கான அனாதைகளும், திக்கற்றோரும் இருக்கின்றார்கள். குழந்தைகள் என்ற வார்த்தை சிறுவர்களையும், சிறுமிகளையும் குறிக்கும். அண்மையில் எடுத்த மக்கள் எண்ணிக்கைப் பட்டியலில், பையன்களைவிட, பெண்களே அதிகமெனத் தெரிகிறது.

குழந்தைகளைப் போற்றிக் காக்க பெற்றோர்களும், உற்றோர்களும் இல்லையெனாமல், அனாதைக் குழந்தைகளுக்குப் புகலிடமும், ஆதரவும் பெரிதும் தேவைப்படுகிறது.

பெண்கள், கல்வி பயின்று, தொழிற் பயிற்சி பெற்று சுயேச்சையாக தங்களைத் தாங்கள் காப்பாற்றிக் கொள்ள முடியும் என்பதை, அவர்கள் மெய்ப்பித்துக் காட்டியிருக்கிறார்கள். அவர்கள் ஆசிரியைகளாகவோ, டாக்டர்களாகவோ, தாதிகளாகவோ, குமாஸ்தாக்களாகவோ வாழச் செய்யலாம். பெண்கள், உத்தியோகத்திற்கு பயிற்சிபெற்றபின், அவர்கள் ஆசைப்பட்டால் இல்வாழ்வை மேற்கொண்டு இல்லறம் நடத்தலாம். அப்போது அவர்களால் குடும்பத்தைச் சரிவர நடத்த இயலும். அதுபோது அவர்கள் கணவனால் கைவிடப்பட்டாலும், அல்லது கணவ

(4-ம் பக்கம் பார்க்க)

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

கழகத் தோழர்களின் கவனத்திற்கு

★

சென்னை மாவட்ட தி. மு கழகச் செயலாளர் தோழர் கே. எம். கண்ணபிரான் அறிவிப்பதாவது:—

"18-10-53-ந் தேதி 'தினத்தந்தி' இதழில், தி. மு. கழகத்தைச் சார்ந்த கே. எல். பாண்டியன் படிப்பகச் செயலாளர் எஸ்.பி.டி. திராவிடமணி என்பவர் பெயரால், '......நேரு, ஆச்சாரியார் ஆகியோர் படங்களைக் கொளுத்துவோம்; பொம்மைகளை உடைப்போம்' என்பதாக அறிக்கை வெளியிடப்பட்டிருக்கிறது.

"இவரது அறிக்கைக்கும், சென்னை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், கிளைக் கழகங்களுக்கும் யாதொரு சம்பந்தமும் இடையாதென்பதை, சென்னை மாவட்டத்திலுள்ள எல்லாக் கிளைக் கழக நிர்வாகிகளுக்கும், பொதுமக்களுக்கும் இவ்வறிக்கையின் வாயிலாக, சென்னை மாவட்ட தி. மு. கழகச் சார்பில் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

"சென்னையில் நடைபெறும் தி. மு. கழக அறப்போர் சம்பந்தமான நிகழ்ச்சிகளுக்கு, சென்னை மாவட்ட கமிட்டி அல்லது தலைமைக் கழக அறிக்கை மட்டுந்தான் அதிகாரபூர்வமானதாகும்.

"தனிப்பட்டவர்கள் இது போல் திட்டம் தருவதோ, அறிக்கை வெளியிடுவதோ தி. மு கழக சட்ட திட்டங்களுக்கும், கழகக் கட்டுப்பாட்டுக்கும் உகந்ததல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்."

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

சமுதாய நலன் திட்டங்கள்

சில குறிப்புகள்

சென்னை, அக். 20—
சென்னை மாகாணத்தில் சமுதாய நலன் திட்டங்கள் கீழ்பவானி, பெரியார், மலம்புழா, தென்கன்னடம் ஆகிய பிரதேசங்களில் நடைபெற்று வருகிறது.

இந்தத் திட்டம் அமுலாகும் விஸ்தீரணம் 3,086 சதுர மைல்கள்; இதில், 908 கிராமங்கள் அடங்கியுள்ளன; மக்கள் தொகை 21,75,551.

தென் கன்னட அணைத்திட்ட பிரதேசம்: (1,250 சதுர மைல்கள்; 302 கிராமங்கள்; 6,18,152 மக்கள் தொகை) இங்கு பாதை அமைப்பதில் முதல் கவனம் செலுத்தப்படுகிறது. பொது மக்கள் இதற்காக ரூ 31,526 கொடுத்துதவியுள்ளனர்.

கீழ்பவானி அணைத்திட்டப் பிரதேசம்:—(701 சதுர மைல்கள்; 187 கிராமங்கள்; 5,62,996 மக்கள் தொகை) அணைத்திட்ட நிதியைத் தொடாமல், கிராம மக்களே சொந்தச் செலவில் 20 மைல் நீளமுள்ள பாதைகளை 35 கிராமங்களில் அமைத்துள்ளனர்.

பெரியாறு அணைத்திட்டப் பிரதேசம்:—(494 3 சதுர மைல்; 306 கிராமங்கள்; 3,95,993 மக்கள் தொகை) நான்கு முதல்தர பாதைகள் அமைக்கும் செலவில் ரூ 10,990-ஐ பொதுமக்கள் கொடுத்துதவினர். பாதைகளை அமைக்க உடல் உழைப்பாலும் பாடுபட்டனர்.

பாரபட்சம் எதற்கு?

கோலாலம்பூர், அக் 19—
இந்திய சர்வ கலாசாலைகளில் படித்த இந்திய ஆசிரியர்களுக்குப் பாரபட்சம் காட்டப்படுவதாக புகார் வந்திருக்கிறது.

இந்தியப் பட்டதாரிகள், மூன்று ஆண்டுகள் ஆசிரியர் பரீட்சைக்குப் பயில வேண்டுமாம்! ஆனால், மலேயா பட்டதாரிகள், மூன்றாவது ஆண்டு படிப்பை மட்டும் முடித்தால் போதுமாம்.

ஐவர் சிறையில்!

இன்று

50-வது நாள்

* *

நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

20—10—1953 செவ்வாய்

இராமசாமிக்கு அன்பழைப்பு

உத்தமபாளையம் சர் பொன்னம்பல தியாகராசன் அவர்கள் மிகமிக நல்லவர்; பரமசாது; விட்டகுறை தொட்ட குறை என்று சென்னை சட்டசபை உறுப்பினராக இப்பொழுதும் இருப்பவர்; அந்தக் காலத்து நீதிக் கட்சியின் தமிழ்நாட்டுத் தூண். கட்சியை விட்டு எல்லோருமே வெளியேறி விட்டாலும்கூட, தாம் கடைசி ஒரு ஆளாகவாவது இருந்து, நீதிக்கட்சிக் கொடியை கம்பீரமாகப் பறக்கவிட்டுக்கொண்டு இருப்பேன் என்று, அவர் அந்தக் காலத்தில் கூறினதை, அவர் காற்றுப்போக்கில் விட்டுவிட்டார் என்பதை, அவருடைய நடைமுறை விளக்கிக்கொண்டு இருக்கிறது.

மற்றொருவர் ஆற்காடு சர் இராமசாமி அவர்கள் ஆவர். நூல் முறையிலும் சரி, பயிற்சி முறையிலும் சரி, சிறந்த அரசியல் புலமை பெற்றுள்ளவர். நாவன்மை மிக்க நாவலர். அவருடைய ஆங்கில சொற்பொழிவு திறத்துக்கு அவரேதான் இணை. வேறு கூறுவது, வெகுளி, விதண்டாவாதம், வயிற்றெரிச்சல்!

நாட்டு நிர்வாகத் துறையில் திறமை மிக்கவர். வாதிடுவதிலும், வல்லுநர். உலக அரசியல் மேதைகளால் நன்கு மதிக்கப்பட்டவர்.

இருவரும், 'கடவு'ளைப் பற்றிக் கவலையற்று இருப்பவர்கள் அல்லர்; நாத்திகர்களும் அல்லர்—தீவிர ஆத்திகர்கள். முன்னவர், உத்தமபாளையத்தார்—சைவர்; சிவநெறியில் சிந்தையைச் செலுத்திக் கிடப்பவர். பின்னவர், திருமால் அடியார்; திருவேங்கடத்தானை தினம் தினம் துதிப்பவர். நெற்றியிலே திருமண் கீற்றுடன் காட்சியளித்துக்கொண்டு இருப்பவர்.

முன்னவர், சபரிமலை ஐயப்பன் சேவையில் ஈடுபட்டுள்ளவர். ஒழிந்த நேரத்தில், தமிழ்நெறி, சிவநெறி, கந்தர் அனுபூதி, திருமுருகாற்றுப்படை போன்ற அரிய பெரிய மக்கள் சேவையிலே ஈடுபட்டுக் கிடப்பவர்.

நாட்டு தினசரி நடைமுறைக்கும், உத்தமபாளையம் உத்தமருக்கும், குமரி முனைக்கும் இமயத்துக்கும் உள்ள தொடர்பளவு பற்று!

அவரும், சொற்பொழிவாற்றக் கிளம்பி இருக்கிறார், திருநெல்வேலியில் கூடிய சென்னை மாநில தமிழ்ச் சங்க பதினொன்காவது மாநாட்டில்.

குதிரை களவுபோன ஆறும் மாதம் லாயத்துக் கதவுகளை இழுத்துப் பூட்டுவது என்று ஒரு பழமொழி உண்டு. அதைப்போல, அவரும், நமது கழகம் துவக்கிய ரயில் நிறுத்தக் கிளர்ச்சிபற்றி முணுமுணுத்து இருக்கிறார். புதுக்கிராம சம்பவம் குறித்தும் பொருந்தா உரை புகன்றிருக்கிறார். 'பார்ப்பனரை, எதற்காகவும், எவரும் வெறுக்காதீர்' என்றும், 'தங்களை வெறுக்கிறார்கள் பலர் என்று பார்ப்பனர்களும் வெளியில் சொல்லித் திரியக்கூடாது' என்றும், உத்தமபாளையத்தார் உபதேசித்திருக்கிறார்.

அரசியலில், ஏனோதானோக்கள் பட்டியலைச் சேர்ந்தவர்கள் இவ்வாறு கூறியிருந்தால், நாம், அதை ஒருபொருட்டாக மதித்திருக்க மாட்டோம். நீதிக் கட்சியினரில் முக்கியமானவர்களில், தமிழ் நாட்டின் தனிப் பெருந் தலைவர் என்று அந்தக் காலத்தில் கூறப்பட்ட ஒருவர், அதிகாரம், அந்தஸ்து பெற பார்ப்பனர் என்று கூறப்படுபவர்களிடம் பங்கு கேட்டதை, 'வகுப்பு நீதி' என்ற இந்த அடிப்படையில் ஒரு இயக்கமே நடந்ததை, அத்துடன் தானும் மனமுவந்து உற்சாகத்தோடு ஒத்துழைத்ததை மறந்துவிட்டதும், பேசக் கிளம்பி இருப்பதும், வேதனை தரும் விசித்திரம்தான்.

குடும்பச் சொத்தை ஒருவனே ஆண்டு அனுபவிப்பதைக் கண்டு, உடன்பிறந்த சிலரும் அச்சொத்தைச் சரிசமமாகப் பகிர்ந்து அனுபவிக்க ஆசைப்படுவதும், அதற்கான நியாயத்தை எடுத்துக் கூறுவதும், 'துவேஷம்,' 'வெறுப்பு' என்று சர் ராஜன் பேசக் கிளம்பியிருப்பதும் வேடிக்கையாகத்தான் இருக்கிறது. அவர், இங்கிலாந்தில் கற்ற பாரிஸ்டர்; சட்ட அறிவு உடையவர், 'வகுப்பு நீதி' பேசுவதை, அக்கிரமமானது என்று இயம்புகிறது? என்னே, காலக் கோளாறு? நிலை மாற்றம்? நிற்க,

ஆற்காடு இராமசாமி அவர்கள், கடலூரில் பேசியிருக்கிறார். அவர் பேச்சுகளில் எல்லாம் நாட்டின் வறுமை நிலை பற்றி விளக்கிக் கூறியுள்ளதுதான் முக்கியமானது,

அதாவது,

"அரசாங்க ஆள் குறைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொழுதும், ஏராளமான ஊழியர்களைப் பதவியிலிருந்து நீக்க நினைத்துக் கொண்டிருக்கும்பொழுதும், மக்கள், தங்கள் **எதிர்ப்புக் குரலை எழுப்பாமல் வாளாவிருப்பது தவறு,"**

ஆளவந்தார்கள் போக்கிற்கு

ஆற்காடு ராமசாமி அறைகூவல்

அழிவுத்தன்மையை அறிந்திருந்தும் போர்ப்புகை மூட்டும் மூட்டாள்தனம்

வேலையற்றோர் கிளர்ந்து எழ வேண்டும் என்று அறிவிப்பு!

கடலூர், அக். 18 —

"அரசாங்கம், ஆள் குறைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போதும், எண்ணற்ற ஊழியர்களை வேலையிலிருந்து நீக்க நினைத்துக் கொண்டிருக்கும் போதும், மக்கள், தங்கள் எதிர்ப்புக் குரலை கிளப்பாதிருப்பது தவறு,"

என்று டாக்டர் ஏ. ராமசாமி முதலியார், கடலூரில் நடைபெற்ற ரோட்டரி கழகக் கூட்டத்தில் கூறினார்.

மேலும் அவர் பேசுகையில் கூறியதாவது:—

அந்தக் காலம்!

"தென்னாற்காடு மாவட்டத்தை சேர்ந்த திவான்பகதூர் சுப்பராய ரெட்டியார், சென்னை மாநில முதலமைச்சராக இருந்த போது, நான் அவர் அமைச்சரவையில் பாராளுமன்ற செயலாளராக இருந்தேன். அந்த நேரத்தில் என்மீது பலர் பலவிதமான குற்றங்களைச் சுமத்தினர். எதிர் குற்றச்சாட்டுகள் சுமத்தவும் தயங்கவில்லை. காலம் சுழலும் போது அவைகளெல்லாம் மறைந்துவிடும்."

வாய் உபசாரம்!

"சாதி, மத வெறிகள் ஒழிய வேண்டும். மக்கள் பட்டினியால் வாடும்போது, நாம் சாதி வெறியையா கிளப்புவது? அரசியல் தலைவர்கள், அனுதாப வார்த்தைகளை வீசியெறிகின்றனர்; ஆனால் காரியத்தில் ஒன்றையும் காணோம்."

முட்டாள்தனம்

"உலகில், அமைதி வேண்டுமென்று சொல்லக்கூடிய நாடு, அரசாங்கம் ஒன்றுமில்லை. ரஷ்யா சீனா, ஜப்பான் இவை நீங்கலாக, ஏனைய நாடுகளை பெல்லாம் நான் கண்டுவந்து விட்டேன். அனைவருமே போரை வெறுக்கத்தான் செய்கிறார்கள். தங்கள் நிலை, செல்வாக்கு, பதவி இவைகளை உயர்த்திக்கொள்ள ஆசைப்படுகிறவர்களே போர்க்கோலம் பூண்டு வருகின்றனர்."

"மக்களின் கலாச்சாரம், பண்பாடு, பொருளாதார நிலை அனைத்தும், போரால் அழிக்கவிடும் என்று அறிந்த பின்பும், போரை விரும்புவது வடிகட்டின முட்டாள்தனம் என்றுதான் சொல்ல வேண்டும்"

பொது உரிமை

"வெளிநாட்டுச் செய்திகளைப் பற்றி தூதுவர்கள் மட்டும்தான் பேசலாமென்று நினைக்கிறீர்கள். சாதாரண உழவனின் கருத்து அவர்களுடையதைவிட எவ்வளவோ தெளிவுள்ளதாக இருக்கலாம் எந்த ஒரு தனி மனிதனின் கருத்தையும் நாம் அசட்டை செய்யக்கூடாது."

தோல்வி மனோபாவம்

"வேலையில்லாக் கொடுமை இன்று உச்சநிலை அடைந்துள்ளது. ஆனால் இதை எதிர்த்து, மக்கள், குரல் எழுப்பவில்லை. ஆள் குறைப்பு நடவடிக்கைகளும் கையாளப்படுகின்றன. நூற்றுக்கணக்கான ஊழியர்கள், வேலையிழந்து, நடுத்தெருவில் நிற்கக்கூடிய அபாயகரமான நிலை ஏற்பட்டுவிட்டது. 10 ஆண்டு வேலை செய்த ஊழியரும் பதவியிலிருந்து நீக்கப்படுகின்றனர். மக்கள் என்ன செய்கிறார்கள்? நமக்கு ஆளும் கலையில் பயிற்சி இல்லை—நாம் பொறுப்பற்றவர்களாக நடந்துகொள்ளுகிறோம்."

"வேலையில்லாத் திண்டாட்டத்தின் காரணமாக பொருளாதார நிலை சீர்குலைந்து வருவதால், மக்கள், போருக்குத் தயாராகின்றனர். இன ஒதுக்கல் கொள்கையின் மூலம் சமூக அநீதி இழைக்கப்படுவதும் போருக்கு மற்றொரு காரணம். தென் ஆப்ரிக்கா மலான் ஆட்சியால்தான் உலகப் போருக்கு வித்தூன்றப்படுகிறது. நம் நிறத்தை கவனித்து கருப்பர் என்று கூறுவது தவறு. மலான் அரசாங்கம் தான் கருப்பு; காரணம், அங்குதான் கருப்புச் சட்டங்களும், கொள்கைகளும் அமுலாக்கப்படுகின்றன" என்று பேசி முடித்தார்.

"ஜாப் பார்லிமெண்டை கலைத்தது சட்டத்திற்கு முரணானது"

ஒரு உறுப்பினருக்கு ஆண்டு படி தர உத்தரவு

டோக்கியோ, அக். 19—

ஜாப் பிரதமர் ஷிகெரு யோஷிதா, சென்ற ஆகஸ்டில் பார்லிமெண்டைக் கலைத்தது, அரசியல் சட்டத்திற்கு விரோதமானதென்று டோக்கியோவிலுள்ள ஒரு கோர்ட் இன்று தீர்ப்புக் கூறியது.

கிசோடி பெக் என்னும் பார்லிமெண்ட் உறுப்பினருக்கு ஒரு ஆண்டு படியைச் செலுத்துமாறு மேற்கூறிய கோர்ட் சர்க்காருக்கு உத்தரவு பிறப்பித்தது.

யோஷிதாவின் நடவடிக்கையை ஆட்சேபித்து, கிசோடா பெக், கோர்ட்டில் வழக்குத் தொடர்ந்தார். பிரதமரின் நடவடிக்கை சட்ட விரோதமானதென்று அவர் வாதாடினார்.

'தென்னிந்தியாவில் வாழ்பவர்கள் அனைவரும் திராவிடர்களல்ல'

ஆச்சாரியாரே உண்மையை ஒப்புகிறார்

"தென்னிந்தியாவில் உள்ளவர்கள் அனைவரும் திராவிடர்களென்று சொல்லுவது அபத்தம் ஏனெனில் இந்தியாவில் அவர்களை எந்தப் பகுதியில் வேண்டுமானாலும் காணலாம்"

என சென்னை முதல்வர் ஆச்சாரியார் அக். 18-ல் சென்னையில் நடைபெற்ற புதை பொருள் ஆராய்ச்சிக் கழகத்தில் பேசுகையில் ஒப்புக் கொண்டார்.

என்று, ஆச்சாரியார் சர்க்காரின் அலட்சணப் போக்கை மறைமுகமாக, தனது பெருந்தன்மைக்கேற்ப, இடித்துக் கூறி இருக்கிறார். எதிர்ப்புக் குரலைக் கிளப்ப வேண்டும் என்று தனது விருப்பத்தையும் வெளியிட்டு இருக்கிறார்.

மேலும் அவர் கூறும்பொழுது, 'வேலையிலலாக் கொடுமை இன்று உச்சநிலை அடைந்துள்ளது. ஆனால், இதை எதிர்த்து மக்கள், குரல் எழுப்பவில்லை' என்று, மக்களின் அலட்சியத்தைக் கண்டு சலிப்படைகிறார்.

மக்கள், குரல் எழுப்பாமல் இல்லை. குரல் எழுப்பத்தான் செய்தார்கள்; எழுப்பிக் கொண்டுதான் இருக்கிறார்கள். ஆனால் காங்கிரஸ் ஆட்சியாளர்களின் காதுகள்தான் செவிடாகக் கிடக்கின்றன.

பட்டினி பஞ்சத்துக்கு ஆளாகி, எலும்புக் கூடுகளாக உள்ள மக்களைக் காணவும், ஆளவந்தார்களுக்குக் கண்ணில்லை. அவர்கள் அழுகுரலைக் கேட்கவும் அவர்களுக்குக் காதுகள் இல்லை.

மக்கள் நலம் பேணுவதுதான் ஒரு ஜனநாயக ஆட்சியின் பணி என்பதைக்கூட காங்கிரஸ் ஆளவந்தார்கள் மறந்திருக்கிறார்கள். எடுத்ததற்கெல்லாம், குண்டாந்தடி, குண்டு கக்கியின் மீதுதான் ஆளவந்தார்களின் திருப்பார்வை செல்லுகிறது.

எனவே, உலகப் புகழ்பெற்ற ஆற்காடு சர் இராமசாமி போன்றவர்களின் சிறு முயற்சிதான், காங்கிரஸ் ஆளவந்தார்களால் ஏற்பட்டுள்ள துன்பத்தைத் துடைக்க, தேவைப்படுகிறது. இந்த ஒரு முயற்சியும் தீர்ந்துவிடட்டும்.

மற்ற நாட்டவர் புகழையே பெரிதென மதித்து நடக்கப் பழகிக்கொண்டிருக்கிற பிரதமர் நேருவுக்கு, உலக அரங்கில் சிறப்பெய்தியுள்ள சர். இராமசாமி போன்றவர்கள் சாடைமாடையாகக் கூறும் கருத்துரைதான் முக்கியமாகத் தேவைப்படுகிறது. ஏதாவது கொஞ்சம் இதனால், பலன் கிடைத்தாலும் கிடைக்கக்கூடும்! இவர், இப்படியே, இரண்டொரு கூட்டங்களில், ஆளவந்தார்களுக்கு எச்சரிக்கை செய்ய வேண்டுகிறோம்.

அவர் குறிப்பிடும் இந்தப் பணி, சாதாரண பணி அல்ல மிகமிக முக்கியமான, இன்றியமையாதப் பணி. எனவே, அவரே, நேரடியாகக் கலந்துகொண்டு, காங்கிரஸ் கனங்களை மக்களாட்சி முறைக்குத் திருப்ப வேண்டும் என்று அன்பழைப்பு அளிக்கிறோம். வருவாரா?

கைத் தொழில்களுக்கு அணுசக்தி

லண்டன், அக். 20—

கைத் தொழில்களுக்கு அணுசக்தியை உபயோகிப்பது சம்பந்தமான பிரிட்டிஷ் திட்டம் இன்னும் சில வாரங்களில் வெளியிடப்படும் எனத் தெரிகிறது. இவை மூன்று வகைப்படும் என்று தெரிகிறது:—

மின்சார உற்பத்திக்கு அணுசக்தியை உபயோகிப்பது; அணுசக்தி உற்பத்தி நிலையம் அமைப்பது; வைத்தியத்திற்கான 'ரேடியோ ஆக்டிவ்' பொருள்களைத் தயாரிப்பது.

டாக்டர் ஜகன்

லண்டன் பயணமானார்

ஜார்ஜ் டவுன், அக். 19—

பிரிட்டிஷ் கயானா முன்னேற்றக் கட்சித் தலைவரான டாக்டர் ஜகன், பர்ன்ஹாம் இருவரும் இன்று விமானத்தில் லண்டனுக்குப் பயணமானார்கள். அவர்கள் டச்சு கயானா வழியாகச் செல்வர். பிற்பகலில் புறப்பட்டு ஆம்ஸ்டர்டாம் செல்வார்கள்; புதனன்று காலை லண்டன் போய்ச் சேருவார்கள்.

ஐதராபாத் காங்கிரஸ், சென்னை காங்கிரசை விட முடை நாற்றம் வீசுகிறது!

தலைவர் ராமாநந்ததீர்த்தரை விலகிக் கொள்ளுமாறு உறுப்பினர் கட்டளை!

நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்படும் என எச்சரிக்கை!

ஐதராபாத்தில் காங்கிரஸ் பிரதமராக உள்ள ராமகிருஷ்ண ராவுக்கும், காங்கிரஸ் கமிட்டி தலைவராக இருக்கிற சாமி ராமாநந்த தீர்த்தருக்கும் பகை மூண்டு இருக்கிறது. இது குறித்து 40 காங்கிரஸ் கமிட்டி உறுப்பினர்கள், தலைவர் பதவியிலிருந்து சாமி தீர்த்தா மரியாதையாக வெளியேறிவிட்டு, மந்திரி சபை ஒழுங்காக நடைபெற அனுமதிக்க வேண்டுமென்றும், இல்லையேல் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டு, விலக்கப்படுவர் என்றும் அறிக்கை அனுப்பி இருக்கிறார்கள்.

இந்த 40 காங்கிரஸ்காரர்களில் மாவட்ட காங்கிரஸ் தலைவர்களும், காரிய கமிட்டி உறுப்பினர்களும் உள்ளனர் என்று சொல்லப்படுகிறது.

இந்த விவகாரம் காங்கிரஸ் மேலிடத்துக்கும், அறிவிக்கப்பட்டு இருப்பதாக நம்பப்படுகிறது.

இதே போன்று மந்திரி சபைக்கு எதிராக 26 சட்டசபை காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டு இருப்பதும் முன்னரே வெளிவந்துள்ள செய்தியாகும்.

"கலை, எல்லோருக்கும் பொதுவான சொத்து"

கோவை, அக். 14—

இன்று மாலை 5-30-க்கு கோவை இந்திய இளைஞர் கழகத்தின் "நன் கலை" குழுவினரால், இக்குழுவின் ஆரம்ப விழா நடைபெற்றது. அவ்வமயம் டைரெக்டர். சோமு அவர்கள் தலைமை தாங்கினார். தோழர் செகதீசன் எல்லோரையும் அறிமுகப்படுத்திய பின், தோழர் கனக.வைத்திலிங்கம், தோழர்கள் கண்ணதாசன், சோமு, நாகராசன் ஆகியவர்களுக்கு வரவேற்பு இதழ் வாசித்தார். தலைவர் முன்னுரைக்குப் பின் திரு. நாகராசன் பேசினார். அவர், தன் பேச்சில், "கலை, எல்லோருக்கும் பொதுவான சொத்து" என்று குறிப்பிட்டார்.

பின்னர், தோழர் கண்ணதாசன் பேசியதாவது:—

"பழங்காலத்தில் கண்ணகி நாடகத்தில் கண்ணகியை 'கர்ணகி' என்று அழைத்து அந்த வரலாற்று கதையை நாடோடி கதையாக ஆக்கிவிட்டார்கள். நான் கல்கத்தாவிற்குச் சென்ற போது, அங்கு தமிழின் சிறப்புச் சொல்லாகிய "ழ"வை சரிவர உச்சரிக்காததைப் பார்த்தேன். அந்த முறையை நான் கல்கத்தாவிலிருந்து திரும்ப தமிழகம் வரும்வரை கடைப்பிடிக்க நேர்ந்து விடும்படியாகி விட்டது. கதையிலே ஓரளவு பிரச்சாரம் தேவை. ஜனநாயகத்தை ஒப்புக்கொண்டவர்கள், கதையிலே பிரச்சாரம் தேவையென்பதை ஒப்புக்கொள்ள வேண்டும். தமிழுவின் பெருமையை தமிழன் உணர்ந்து ரசிப்பதில்லை."

மாணவர் அழகிரி அறிவு பாசறை

மேட்டோ தேக்கம், அக். 15—

மேற்படி பாசறையின் கமிட்டி கூட்டம் 14-10-53ல், தோழர் ப. கஞ்சப்பன் தலைமையில் நடந்தது. அதுபோது பல பொருள் பற்றி விவாதித்தும், பாசறையை மேலும் அபிவிருத்தி செய்யும் பொருட்டு கருமலைகூடல், குஞ்சாண்டியூர் இரண்டு கிராமத்திலும் பாசறையின் கிளைகள் ஏற்படுத்த முடிவு செய்யப்பட்டது. தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன.

ஆட்சி மொழி தமிழாக வேண்டும்

அழகப்பா கல்லூரியில் டாக்டர் மு. வரதராசனார்

காரைக்குடி, அக். 18—

"தமிழ்நாடு தனி நாடாக வேண்டும்; கல்லூரியிலும், சர்வ கலாசாலையிலும், சட்ட சபையிலும், எங்கும் தாய் மொழியாம் தமிழே முதல் மொழியாதல் வேண்டும்; கவர்னரின் கையெழுத்து தமிழிலேயே இருத்தல் வேண்டும், இதனைத் தமிழர்கள் செய்யா விட்டாலும், ஆந்திர சகோதரி செய்தே தீருவாள்;

ஆந்திர நாட்டின் பிரிவினைக்காகப் போராடிய சுவாமி சீதாராமையைப் பாராட்டுகிறேன்.

நம் தமிழ் நாட்டில்தான் சுவாமியார்களின் தொகை அதிகம். ஆனால் அவரைப்போல ஒருவர் கூட இங்கு இல்லையே என்று நான் வருந்துகிறேன்."

என்று, டாக்டர் மு.வரதராசனார் "தமிழ்—அன்றும்—இன்றும்," என்ற பொருள் பற்றி 14-10-53 தேதி காரைக்குடி அழகப்பா கல்லூரி மாணவர் கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

இனிமேல் கிடையாது!

பம்பாய், அக். 20—

செல் அரைக்கும் இயந்திரங்களுக்கு, இனி புதிதாக லைசென்சு வழங்கப்பட மாட்டாது என்று தெரிகிறது. அரிசியில் சத்து குறையாமலிருக்கவும், பெண்களுக்கு வேலை கொடுக்கவும் கைக்குத்தல் முறைக்கு ஊக்கமளிக்கப்படுமென்றும் கூறப்படுகிறது.

"இன்றைய காங்கிரஸ், கண்ணியமற்றவர்களின் கூடாரமாகிவிட்டது"

திண்டுக்கல் கூட்டத்தில் காங்கிரஸ் ஊழியர்

திண்டுக்கல், அக். 19—

இங்கு நடைபெற்ற காந்தி பிறந்த தின பொதுக்கூட்டத்திற்கு எம். எஸ். அப்துல்சத்தார் தலைமை வகித்தார். அவருடைய தலைமையுரையில் குறிப்பிட்டதாவது:—

"நாம் காந்தியை மறந்தோம்; அவருடைய கொள்கைகளை காற்றிலே பறக்கவிட்டோம், பதவி, பர்மிட், உத்தியோக வேட்டை ஆகியவற்றிலேயே காங்கிரஸ்காரர்கள் காலம் கழித்து வருகிறார்கள். தியாகத்தின் பேரால் ஏழை முதல் எழிலோன் வரை அனைவரும் 5 ஏக்கர் தியாகி நிலம் பெறுகின்றனர். காந்தியாரின் கொள்கையைப் பின்பற்றுகிறவர்கள் காங்கிரசில் இல்லை.

"காங்கிரஸ் கட்சி கண்ணியமற்றவர்களின் கூடாரமாகி விட்டது அதிகாரிகளுக்கு உடந்தையாக இருந்து லஞ்சம் வாங்கிக் கொடுக்கும் கையாட்களாக காங்கிரஸ்காரர்கள் மாறிவிட்டனர்."

இந்தக் கூட்டத்தில் மந்திரி மாணிக்கவேலரும் கலந்து கொண்டார்.

திருச்சி தி. மு. கழகம்

திருச்சி, அக். 19—

திருச்சி தேவர் மன்றத்தில் 11—10—53ல், தோழர்கள் ப. உ. சண்முகம், சித்தலி ஏ. சுப்ரமணியம், எம். எஸ். மணி, ஏ. பி. தர்மலிங்கம், எஸ். செமோறன் ஆகியோரை வைத்து, நடைபெற்ற தி. மு. கழகக் கூட்ட வரவு செலவு கணக்குக் குறிப்பு:

தேவர் மன்றம் வாடகை ரூபாய் 25—0—0; ஒலிபெருக்கி செலவு 11—7—0; விளம்பரச் செலவு 17—0—0: அஞ்சல் ம. ஆ. கமிசன் செலவு 2—10—0; சொற்பொழிவாளர்கள் வழிச் செலவு 32—0—0; ஒலிபெருக்கி அனுமதிக் கட்டணம் 2—0—0; சாப்பாடு, டிபன் செலவு 10—0—0; வண்டி வாடகை, சோடா, பஸ் செலவு, தேவர் மன்றம் காவலாளி இனும் மற்றும் இதரச் செலவு உள்பட 8—6—6; ஆக மொத்த செலவு 108—7—6.

வரவு ரூ. 109—2—0; செலவு ரூ. 108—7—6—; மீதி இருப்பு 0—10—6—என்று திருச்சி நகர உதவி செயலாளர் க. அருணகிரி அறிவிக்கிறார்.

சுயமரியாதைத் திருமணங்களை செல்லுபடியாக்க தீவிர நடவடிக்கை

சென்னை சட்ட அமைச்சர் அறிவிப்பு

சென்னை, அக். 19—

"ஐகோர்ட் தீர்ப்பின் காரணமாக செல்லுபடியாகாமல் போன சுயமரியாதைத் திருமணங்களை செல்லுபடியாக்க சர்க்கார் ஆலோசித்து வருகிறது,"

என்று, சட்ட அமைச்சர் குட்டி கிருஷ்ணன் நாயர் இன்று ஒரு பேட்டியில் சொன்னார்.

இதுபற்றி மத்திய அரசாங்கத்துடன் கடிதப் போக்குவரத்து வைத்துக் கொண்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

"பதிவுத் திருமணம் செய்து கொள்ள வேண்டும்; அல்லது சம்பிரதாயப்படி திருமணம் செய்துகொள்ள வேண்டும்; இவையல்லாது செய்யப்படும் திருமணங்கள் செல்லுபடியாகாது," என்று உயர்நீதி மன்றம் தீர்ப்பளித்தது அனைவருக்கும் நினைவிருக்கலாம்.

"நிற பேதம் கூடாது"

மாஜிஸ்திரேட் உத்திரவு

நைரோபி, அக். 20—

ஆப்பிரிக்காவின் ஒரு பகுதியான தங்கனிகாவில், நிறபேதம் கூடாது, என்று, ஒரு நில சம்பந்தமான வழக்கில தீர்ப்புகூறிய மாஜிஸ்திரேட் கட்டளையிட்டார்.

நிலத்தை விற்றவர், வாங்கியவருக்கு ஒரு நிபந்தனை விதித்தார். அதாவது, மறுபடியும் அவர் நிலத்தை விற்க நேர்ந்தால் அசல் ஐரோப்பியருக்கே அவர் நிலத்தை விற்கவேண்டுமென்றும் ஐரோப்பியரல்லாதாருக்கு விற்கக்கூடாது என்பதுமேயாகும்.

தீர்ப்புக் கூறிய மாஜிஸ்திரேட் நிலம், மாட்சிமை தங்கிய ராணிக்குத்தான் சொந்தமென்றும், சர்வதேச சட்டப்படி, ராணி விதிக்க முடியாத ஒரு நிபந்தனையை, ஒரு விவசாயி, மற்றவருக்கு விதிக்க முடியாது என்றும் கூறினார்.

"இம்மாதிரியான நிபந்தனைகள், இன பேதங்களைத் தூண்டிவிடு"மென்றும் மாஜிஸ்திரேட் எச்சரித்தார்.

நண்பனுக்கு நேரிட்ட கதி!

முன்னாள் மன்னரால் நேரிட்ட நிலை

கெய்ரோ, அக். 20—

முன்னாள் எகிப்து மன்னர் பரூக்குக்கு, பத்திரிகை ஆலோசகராகவும், மந்திரியாகவும், நெருங்கிய நண்பராகவும் இருந்த கரீம் டேபட் தேசத் துரோக, லஞ்ச குற்றங்களுக்காக விசாரணையிலிருந்து வருகிறார்.

பரூக்கை, தவறான பாதைக்கு மனதைச் செலுத்தி, 2,66,000 பவுன் கொள்ளையடித்ததாகவும், அயல் நாட்டுடன் போக்குவரத்து வைத்துக் கொண்டதாகவும் ஒரு குற்றம் சுமத்தப்பட்டிருக்கிறது.

குற்றச்சாட்டுகளுக்குப் பதிலளித்த டேபட், பரூக் மன்னர் அசம்பாவிதமாக நடந்து கொண்டதற்கு அவர் உடல் நிலைமையே காரணமென்றும், வயது ஆக ஆக ரொம்பவும் கெட்டுப் போனார் என்றும் கூறினார்.

தேசத் துரோகம் செய்ததாக வழக்குத் தொடரப்படும் நபர்களுக்கு தூக்கு தண்டனை விதிக்கப்பட்டால், தூக்கிலிட, தன் கூலியாகிய 5 பவுனை வாங்கிக் கொள்ளப் போவதில்லை யென்று முகம்மது ஷம்குல் அறிவித்திருக்கிறார்.

பாகிஸ்தான் பிரதமருக்கு கான்சாகிப் புகழ்மாலை!

அரசியல் விதவை நிலையால் டாக்டரின் மனமாற்றம்!

முன்னாள் வாசனை நீங்காமல் 'அந்தராத்மா' அறிவிக்கிறது!

லாகூர், அக். 19—

வடமேற்கு எல்லைப்புற மாகாண முன்னாள் மந்திரியும், எல்லைகாந்தி கான்அப்துல் கபார்கானின் சகோதரருமான டாக்டர் கான்சாகிப், நிருபரொருவருக்கு அளித்த பேட்டியில், தாங்கள் தேசவிரோதிகளென்று பாகிஸ்தான் சர்க்கார் காவலில் வைத்திருப்பதன் மூலம், தேச சேவை செய்ய தங்களுக்கு சந்தர்ப்பமளிக்க, சர்க்கார், மறுக்கிறதென்றார்.

'அந்தராத்மா!'

மேலும் அவர் கூறுகையில், "நிலைமை இப்போது இருப்பதைப் போல, நீடித்தவாறதென, என் அந்தராத்மா சொல்கிறது. கூடிய விரைவில் நிலைமை சீர்பட்டே தீரும்," என்றார்.

'தேசியம்' கரைந்து விட்டது!

"பாகிஸ்தான் அரசியல் இஸ்லாமிய கோட்பாடுகளின்படி அமைவதை நான் எதிர்க்கவில்லை. அவ்விதமாக இருந்தால் அது உன்னதமான சோஷலிசமாக இருக்கும். ஆனால் நம்மில், வைதீகர்களும் சரி, லௌகீகர்களும் சரி, பெரும்பாலானவர்கள் இஸ்லாத்தைப் புரிந்து கொள்ளவில்லை என்பதுதான் இதிலுள்ள கஷ்டம்."

இங்கும் பொருந்தும்

"இத்தனை ஆண்டு காலத்தில் இந்த மாகாணத்தில் நடந்துள்ள உருப்படியான வேலைகள் மிகக் குறைவு. ஆரம்ப விழாக்கள் நிரம்ப நடக்கின்றன."

முகஸ்துதி!

"பாக். பிரதமர் முகமதலியை மக்கள் ஒருமுகமாக ஆதரிக்க வேண்டும். அவர் உற்சாகி; திறமையான உழைப்பாளி; இளைஞர்; எடுத்த முயற்சியில் அவர் வெற்றி பெறுக," என்றார்.

ஆந்திர மாநிலம்—மொழிவாரி கிளர்ச்சிக்கு அடிகோலிவிட்டது

லண்டன், அக். 20—

"மொழிவாரி மாநிலப் பிரிவினையை ஒத்திப்போடாமல், சீக்கிரமாக செய்து முடிப்பதே நல்லது," என்று 'மாஞ்செஸ்டர் கார்டியன்' பத்திரிகை எழுதியுள்ளது.

ஆந்திர மாநிலம் நிறுவப்பட்டதால், மற்றமொழி பேசுபவர்கள், தனி மாநிலம் கேட்கும் கிளர்ச்சிக்கு அடிகோலிவிட்டதென்றும், பம்பாயையும் துண்டாட நேரிடுமென்றும் எழுதுகிறது.

மொழிவாரி மாநிலப் பிரிவினையை மத்திய சர்க்கார் ஒத்திக் கொண்ட பிறகு, அதை மேலும் ஒத்திப் போடமாட்டார்கள் என்று நம்புவதாகக் கூறுகிறது.

மொழிவாரி மாநிலப் பிரிவினை கமிஷன் ஏற்படுத்தி, அறிக்கை சமர்ப்பிக்கப்படும் வரையில் காத்திருக்கலாமாவென்று கேட்கிறது.

மத்திய சர்க்கார், பிரச்சினையை தாமதப்படுத்துகிறார்கள் என்று தெரிந்தால், கம்யூனிஸ்டுகள் இதைத் தங்களுக்கு சாதகமாக உபயோகித்துக்கொண்டு, ஆந்திராவில், பொதுத் தேர்தலின்போது பல ஸ்தானங்களைக் கைப்பற்றியதைப்போல், இப்போதும் பலம் பெறுவார்கள் என்று அப்பத்திரிகை எச்சரிக்கை செய்கிறது.

ஆகவே, பிரிவினையை ஒத்திப் போடாமல், சீக்கிரமாக முடிப்பதே நல்லது என்றும் கூறியுள்ளது.

சென்னை சட்டசபை

சென்னை, அக். 20—

சென்னை சட்டசபை டிசம்பர் 14-ல் கூடும் என்று தெரிகிறது. இம்மாதத்தில் 10 நாட்களே கூட்டம் நடக்கும். இக்கூட்டத்தில் முக்கியமாக 1954-ம் ஆண்டைய பிப்ரவரி, மார்ச் ஆகிய மாதங்களுக்கு 'செலவு மானிய கிராண்டுகள்' நிறைவேறுமென்று தெரிகிறது.

அறப்போர் வீரர்களுக்கு அரியலூரில் வரவேற்பு

அரியலூர், அக். 19—

15—10—53-ல், திருச்சி மத்திய சிறையிலிருந்து டால்மியாபுரம் பெயர் அகற்றப் போராட்டத்தில் கலந்து கொண்டு, தோழர்கருணாநிதி அவர்களுடன் சிறைபுகுந்த அரியலூர் தோழர்கள் விடுதலை அடைந்து இரவு 8-30 மணிக்கு, அரியலூர் ரயில்வே நிலையத்தில் வந்திறங்கியபோது, பொது மக்களும், கழகத் தோழர்களும் மாலை அணிவித்து வரவேற்றார்கள். அங்கிருந்து ஊர்வலமாக புறப்பட்டு, இரவு 9 மணிக்கு ஆயிரக்கால் மண்டபத்தை அடைந்து பொதுக்கூட்டம் துவங்கியது. கூட்டத்திற்கு, தோழர் சோ. சேப்பெருமாள் தலைமை தாங்கினார். தோழர்கள் மேலப்பழூர் எம். ஆர். செல்லப்பா, திட்டக்குடி ம. பொன்னம்பலம் ஆகியோர் அறப்போர் வீரர்களைப் பாராட்டிப் பேசினர்.

இறுதியாக அறப்போர் வீரர்கள் சார்பில் தோழர் தமிழ்முத்து அவர்கள் எல்லோருக்கும் நன்றி தெரிவித்துப் பேசியபின் தலைவர் முடிவுரையுடன் கூட்டம் இனிது முடிந்தது.

மற்ற ஊர்களில்...

★

திருவொற்றியூர்

சென்னை, அக் 19—

சிறை மீண்ட தோழர்களைப் பாராட்ட நேற்று மாலை, திருவொற்றியூரில், தோழர் டி. சண்முகம், எம். எல். ஏ., தலைமையில் ஓர் பாராட்டுக்கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தின் துவக்கத்தில் தோழர்கள் நாகர்கோயில் ராசரத்தினம், எ. கே. முத்தரசு, சிவகங்கை என். ஆர். இசைமதி ஆகியோர் இயக்கப்பண் பாடினர். அதன்பின் நடிகமணி நாராயணசாமி, முதலவை ஆர். எஸ். பாண்டியன், என் என். தென்னரசு, வை. மதுரை ஆகியோர் பேசினர். கூட்டத்தில் பல தீர்மானங்கள் நிறைவேறின.

சிறை மீண்ட தோழர்கள் :— எம். கணபதி, ஆர் நமசிவாயர், எஸ். சுந்தரம், உ. வீரபத்திரன், சீனியப்பன், எம். குருசாமி, ஆர். ஜெபவேல்.

* * *

சாலையில் நடைபெற்ற கிளை கழகத் தேர்தலில் பழைய நிர்வாகிகளே தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

நெல்லிக்குப்பம்

12—10—53ல், நெல்லிக்குப்பம் திரௌபதையம்மன் திடலில், சிறை மீண்ட தோழர்களை பாராட்ட, தோழர் ஆர். பாலகுருசாமி தலைமையில் கூட்டம் நடைபெற்றது. தலைவர் சிறை அனுபவங்களை விளக்கிப் பேசினார். தோழர்கள் இளம்வழுதி, எம் ஏ., பி எல்., தி. மு. கழகத்தின் கட்டுப்பாட்டை விளக்கி, சிறைமீண்ட 13 தோழர்கட்கும் மலர் மாலை சூட்டினார்.

அடுத்து, தோழர் ஏ. கோவிந்தசாமி, எம். எல். ஏ, பேசுகையில், சென்னை கலித்தனத்தைப் பற்றியும், அங்கு நம் தோழர்களைத் துன்புறுத்திய குண்டர்களைப் பற்றியும், ஆத்தக்குடியில் சதிவழக்கு ஒன்றை நம் தோழர்கள்மேல் சுமத்தியதைப் பற்றியும் விளக்கமாக சொற்பொழிவாற்றினார். கூட்டத்தில் ஆத்தக்குடி சதிவழக்குக்காக ரூ. 10—12—9 வசூலாயிற்று. இந்தப் பணத்தை தோழர் ஏ. கோவிந்தசாமி அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. பல தீர்மானங்கள் நிறைவேறியது.

கோவை

12—10—53ல் தாலுகா நடராசன படிப்பகத்தில், ரயில் நிறுத்தப் போரில், 2 மாத தண்டனை அனுபவித்து சிறை மீண்ட தோழர்கள் ச. ஆறுமுகம் மா. தங்கவேல் ஆகியோருக்கு தோழர் அழகரசு தலைமையில் பாராட்டுக் கூட்டமும் தேநீர் விருந்தும் நடைபெற்றது. தோழர்கள் இ. நா. கதிரொளி, முத்துக்குமார், எஸ். ஏ. ராசமாணிக்கம், சி. டி. தண்டபாணி அரசு, கோவைச் செழியன் ஆகியோர் பேசினர்.

அய்யம்பேட்டை

கிருஷ்ணா டாக்கீசுக்கு அருகில், சிறை சென்ற தோழர்களைப் பாராட்ட தோழர் ஆறுமுகம் தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர் குடந்தை சந்தானகிருஷ்ணன் சிறை சென்ற தோழர்களைப் பாராட்டிப் பேசினார். சேலம் சித்தனி சுப்ரமணியம் ஆச்சாரியாரின் போக்கைப் பற்றியும், தி மு. க. தலைவர்களை விடுதலை செய்யக்கோரியும் பேசினார். சிறை மீண்ட தோழர்கள் :- பி. சுப்பையன், புகாரி, ஜமால், ராஜமுகமது, நடேசன், மணி

திருவாரூர்

11—10—53ல், திருவள்ளுவர் முற்போக்கு படிப்பகச் சார்பில், ரயில் நிறுத்த போராட்டத்தில் சிறைசென்று திரும்பிய தோழர்கள் டாக்டர் இரா.விசயராகவன் கு தென்னன், க. நாகப்பன், எ. முத்துராமன், எ. கருணாநிதி, கருப்பசாமி. சுந்தரம், ஆகியோருக்கு தேனீர் விருந்தும், தோழர் ராமமூர்த்தி தலைமையில் பாராட்டுக் கூட்டமும் நடைபெற்றது. தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றினர்

பட்டுக்கோட்டை

ரயில் நிறுத்தப் போரில், இரண்டு மாத சிறை தண்டனை அடைந்து, சிறைமீண்ட தோழர்களுக்கு, 29—9—53-ல் காசாங்குளம் வடகரையில், தோழர் எஸ். சங்கரன் தலைமையில், பாராட்டுக்கூட்டம் நடைபெற்றது. அவ்வமயம் தோழர்கள் சி. பி. சிற்றரசு, க. ரெங்கசாமி. ஆகியோர் சொற்பொழிவாற்றினர். தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன.

சிறைமீண்ட தோழர்களின் விபரம் :—

எ. அப்துல்சமது, கே. சாரங்கன், வி. இராமசாமி, ஆளவந்தார்.

பாலக்காடு

ரயில் நிறுத்தப் போராட்டத்தில் கலந்து கொண்டு, 3 மாதத் தண்டனை பெற்று 11—10—53ல் விடுதலையான தோழர்களுக்கு அன்று மாலை 6 மணிக்கு, பாலக்காடு, கோட்டை மைதானத்தில் தோழர் சி ராசகோபால் தலைமையில் வரவேற்புக் கூட்டம் நடைபெற்றது தோழர்கள் சி. எம். ராசு, சி. டி. தண்டபாணி, எம். ஏ. ராஜமாணிக்கம் ஆகியோர் சிறை மீண்ட தோழர்களைப் பாராட்டியும், இன்றைய அரசியல் நிலை பற்றியும் சொற்பொழிவாற்றினர்.

விடுதலை பெற்ற தோழர்கள் : சி. எஸ். மணியன், வி. கருப்புசாமி, சி. சுப்பையன், சேதுபாவா, சுப்ரமணியன், கிருட்டிணன்.

குன்னூர்

ரயில் நிறுத்தப் போரில் கலந்துகொண்ட 27 குன்னூர் (நீலகிரி) தி மு. கழகத் தோழர்கள் 2 வார சிறை தண்டனையை அனுபவித்து, 8—10—53-ல், கோவை மத்திய சிறையிலிருந்து விடுதலை அடைந்தனர். தோழர் கோவை செழியன் சிறை மீண்ட தோழர்களை வரவேற்றார். அன்றிரவு, தோழர் சண்முகநாதன், சிறை மீண்ட தோழர்களுக்கு மேட்டுப்பாளையம் கழகக் கட்டடத்தில் விருந்தளித்து உபசரித்தார்.

* * * * * * * * * * * *

கல்லக்குடி அறப்போர்

★

இன்று

99-வது நாள்

★

கல்லக்குடி அறப்போர் தலைவர் மு. கருணாநிதி, மற்றும் பல தோழர்கள் சிறையில்

★

இன்று

98-வது நாள்

* * * * * * * * * * * *

9—10—53ல், குன்னூர் நகர தி. மு. கழகம் வரவேற்பளித்தது. தோழர்களனைவரும் ஊர்வலமாக வந்து, அண்ணா திடலில் கலந்தனர்.

சிறை சென்ற தோழர்கள் வருமாறு :—

சே. சு. ஆகன், இராமுகுட்டி, க. அன்பன், பெ. ஆறுமுகம், இரா. தமிழ்மணி, ஈ. சு. மணி, எம். டி. சாமி, என். எஸ். வாசு, த. கண்ணன், மஜீத், முனுசாமி, அய்யாசாமி, சே. குப்புசாமி, ஆர். குப்புசாமி, ரப்புதீன், ராமச்சந்திரன், நஞ்சுண்டன், இராசு, நஞ்சப்பன், ஜம்புலிங்கம், நடராசன், பி. ஜி. பதி, அடைக்கன், அரங்கசாமி, நாகராசன், ஆர். எம். ஆண்டி, வேணுகோபால்.

அனகாபுத்தூர்

அனகாபுத்தூர், அக். 14—

13–10–53-ல் பல்லாவரத்தை அடுத்துள்ள அனகாபுத்தூரில், தோழர் ஆர். புரட்சிமணி தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது, அதுபோது, தோழர் ஏ. கோவிந்தசாமி, எம். எல். ஏ, அவர்கள், கழகப் போராட்டங்கள் பற்றியும், ஆச்சாரியார் சட்டசபையில் நடந்துகொள்ளும் விதம் குறித்தும், புதுக் கல்வித் திட்டம் பற்றியும் பேசினார்.

அடுத்து, தோழர் முதலவை ஆர். எஸ். பாண்டியன், ரயில் நிறுத்தப்போராட்டம் பற்றியும், நேருவின் அலட்சியப் பேச்சைக் கண்டித்தும் பேசினார்.

அடுத்து, தோழர் காஞ்சி-கல்யாணசுந்தரம் அவர்கள், சிறை சென்ற தோழர்கள் ஆறு பேருக்கும் மாலையிட்டுப் பாராட்டி, சிறை புகக் காரணமாயிருந்த நேருவின் அலட்சியப் பேச்சின் தன்மையை விளக்கி, இனி, அவர் அவ்வாறு தவறிப் பேசாதபோக்கு வேண்டும் என்று குறிப்பிட்டார். மேலும், அவர் பேசுகையில், ஆச்சாரியார் சமீபகாலமாக தி. மு. கழகத்தை ஒடுக்கவும், ஒழித்துக்கட்ட முயலுவதையும், அதன் ஆணிவேரை அறுக்க வேண்டுமென்று காங்கிரஸ் தொண்டர்களைத் தூண்டிவிட்டு வேடிக்கை பார்ப்பதையும், தி. மு. கழகத்தின் மீது பல சதிக் குற்றங்களை சுமத்திப் பழி தீர்க்கப் பார்ப்பதையும் விளக்கினார்.

திரு. வி. க். மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தும், தலைவர்களை விடுதலை செய்யக் கோரியும், மற்றும் பல தீர்மானங்களும் நிறைவேறின

சிறை சென்ற தோழர்களின் பெயர் :—

இரா. கோவிந்தராசன், ஏ பொன்னுசாமி, எஸ். நித்தியானந்தம், எம் பி. ருத்திரசேகரன், பி. ரத்தினம், டைலர்.

உதகை

ரயில் நிறுத்தப் போரில் ஈடுபட்டு, இருவார சிறை தண்டனை அனுபவித்த, தோழர்கள் பே. ஆறுமுகம், த. நஞ்சுண்டன் ஆகியோருக்கு, தோழர் பொ. இளஞ்சோழன் அவர்கள் இல்லத்தில் பாராட்டுக் கூட்டமும், தேநீர் விருந்தும் அளிக்கப்பட்டது. கூட்டத்திற்கு தோழர் செயராமன் தலைமை வகித்தார். சிறை மீண்ட தோழர்கள் சிறை அனுபவம் பற்றிப் பேசினர்.

ஏழைக் குழந்தைகள் பள்ளிக்கு வாராததற்கு ஏழ்மையே காரணம் !

இலட்சக்கணக்கான குழந்தைகள் சம்பந்தப்பட்ட பெரிய பிரச்னை என மந்திரி கைவிரிப்பு

தானு, அக். 17—

"ஆதிவாசி குழந்தைகள் பள்ளிக்கூடத்துக்கு வாராததற்கு, அவர்களுக்குத் தினசரி ஒரு வேளைக்குக்கூட போதுமான சோறு கிடைக்காததே முக்கியமான காரணமாகும்."

இவ்வாறு தாராபாய்மோடாக் என்ற பம்பாய் கல்விசிறப்பெய்தியுள்ள அம்மையார், போர்தி என்ற ஊரில் உள்ள ஆதிவாசி பள்ளிக்கூடத்துக்கு பார்வையிடச் சென்ற பம்பாய் சர்க்கார் பிற்பட்ட வகுப்பின் துணை மந்திரி வாண்டேகார் முன்னிலையில் குறிப்பிட்டார்.

ஆதிவாசி பெரியவர்கள் வயிற்றுக்குத் தேடி அலைவதே பெருங் கஷ்டமாக இருக்கிறது என்றும், அவர்கள் பெரும்பாலும் காட்டில் கிடைக்கும் கிழங்குகளைக் கொண்டே பசியாறி திருப்தி கொள்ள வேண்டியதாக இருக்கிறது என்றும் குறிப்பிட்டார்.

இதற்கு மந்திரி, இது ஒரு பெரிய பிரச்னை என்றும், பல லட்சம் ஆதிவாசிக் குழந்தைகளைப் பொருத்ததென்றும் கூறி பெருமூச்செறிந்தார்.

சொற்பயிற்சி கூட்டம் துவக்கம்

மாயூரம் நகர திராவிட மாணவர் முன்னேற்றக் கழகத்தின் சார்பில் 16-10-53ல், ஆசிரியர் வேலாயுதம் மன்றத்தின் சார்பில் சொற்பயிற்சி மன்றம் துவக்கப்பட்டது. தோழர் மா. செங்குட்டுவன் தலைமை வகித்து சொற்பயிற்சி முறைகளை விளக்கினார். தோழர் என. சிட்டப்பா, மற்றும் பலர் பேசினர்.

நாச்சியார்கோவில் தி.மு. கழக உறுப்பினர்களுக்கு

★

நாச்சியார்கோவில் தி. மு கழக உறுப்பினர் அவசரக் கூட்டம் 21—10—53 புதன்கிழமை இரவு 9 மணிக்கு செயலாளர் இல்லத்தில் நடைபெறுவதால் இதனையே அழைப்பாக ஏற்றுக் கொண்டு உறுப்பினர்கள் அனைவரும் தவறாது வருமாறு செயலாளர் கேட்டுக்கொள்கிறார்.

இது நீதியா ?

விக்கிரவாண்டியில் அதிகாரிகள் அட்டகாசம்

விழுப்புரம், அக். 19—

15—7—53ல், விக்ரவாண்டியில் ரயில் நிறுத்தப் போராட்டத்தில் கலந்து சிறை சென்ற பஞ்சாயத்து போர்டு மெம்பர் தோழர் எஸ். கல்வராயன் அவர்களுக்கு விழுப்புரம் நீதிபதி அவர்களால் ரூ.50 அபராதம் விதிக்கப்பட்டது. கட்ட மறுத்து, தோழர், 6 வாரம் சிறை புகுந்தார்: சிறை தண்டனை காலம் முடிந்து 1—9—53ல் விடுதலையடைந்தார்.

18—10—53ல், தோழர் கல்வராயனை, ரயில் நிறுத்தப் போராட்டத்தில் கலந்துகொண்டதற்காக (சிறை தண்டனை அனுபவித்தும்) அரசியலார் விதித்த ரூ. 50-ஐ அபராதமாகக் கட்டுமாறு, விக்ரவாண்டி போலீசாரால் வற்புறுத்தப்பட்டது. அபராதம் கட்ட வேண்டுமென்ற வாரண்டோ, அல்லது சம்மனோ கொண்டுவரப்படவில்லை. தோழர் கல்வராயன் அபராதத் தொகையைக் கட்ட மறுத்ததால், விக்கிரவாண்டி சப்-இன்ஸ்பெக்டர், எட் கான்ஸ்டேபிள் ஆகியவர்கள் அவ்வூர் கிராம முன்சீப்பின் உதவி கொண்டு, பலாத்காரமாக, அவருக்குச் சொந்தமான இரண்டு காளை மாடுகளை ஜப்தி செய்வதாகச் சொல்லி, கட்டி வைத்திருந்த இரண்டு மாடுகளையும் போலீஸ் ஸ்டேஷனுக்கு ஓட்டிச் சென்றுவிட்டனர்

பின்னர் தோழர் கல்வராயனின் நகப்பனார் 50 ரூபாயையும் கட்டிவிட்டு மாடுகளை ஓட்டிவந்துவிட்டார். அரசியலாரின் இச்செய்கையைக் குறித்து அக்கிராமவாசிகள் பலவாறாகப் பேசிக் கொள்ளுகிறார்கள். (ந—வி)

அனைதகளில்......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வேலைபற்றிருந்தாலும் அவள் அஞ்ச வேண்டியதில்லை. எனவே, அனாதைப் பெண்களுக்குத் தகுந்த ஆதரவளித்து; கல்வியும் தொழிற் பயிற்சியும் வழங்கி, நாட்டின் முன்னேற்றத்திற்குப் பெண்களை வழிகாட்டிகளாக ஆக்க வேண்டும்," எனக் குறிப்பிட்டுள்ளார்.

திராவிட முன்னேற்றக் கழகத் அச்சகத தோழர் இரா.நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, ருசிய நாராயண செட்டித் தெரு, திருவல்லிக்கேணி) வெளியிடப்பெற்றது. ஆசிரியர்: சி. ஏ. அண்ணாதுரை, எம்.ஏ.

"குன்றாத புகழ் பெற்றதும், குவலயம் போற்றுவதும் குறள் ஒன்றுதான்"

புரசையில் தமிழறிஞர்களின் பேருரை

சென்னை, அக். 19—

புரசைவாக்கம் கங்காதீசுவரர் கோயில் தெரு, நகர சபை ஆண்பாடசாலையில் நேற்றுமாலை திருக்குறள் வகுப்பை ஆர். பி. சேதுப்பிள்ளை துவக்கி வைத்தார். டி. புருஷோத்தம் எம். எல். சி. தலைமை வகித்தார்.

தமிழ்ப் பெரியார் திரு. வி. க. பெயரால் நீதிபதி சோமசுந்தரம் ஒரு நூல் நிலையத்தைத் திறந்து வைத்துப் பேசுகையில், திரு வி. க.-வின் தமிழ்ப் பற்றையும், தொழிலாளர்களுக்கு அவர் செய்துள்ள நன் தொண்டையும் குறிப்பிட்டார். புருஷோத்தம் அவர்கள் திரு. வி. க.-வின் படத்தைத் திறந்து வைத்துப் பேசினார்.

கழகத் தலைவர் க. அன்பழகன் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

குறள் வகுப்பைத் திறந்து வைத்த ரா. பி. சேதுப்பிள்ளை பேசுகையில், குறளை மிஞ்சும் நூல், உலகின் எந்தப் பகுதியிலும், எந்த மொழியிலும் இல்லை. மனித வாழ்க்கையின் சிறந்த அம்சத்தை அடிப்படையாகக் கொண்டது 'குறள்' என்றார்,